**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**DEPOSITION OF WITNESS**

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**STC.No. 221/2022** **DATE:04.07.2025**

**எ.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. வன்னியராஜா | Father's Name | : | திரு. ரத்தினசாமி |
| District | : | | Taluk | : | |
| Village | : | | Calling | : | கிளை மேலாளர் |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.07.2025.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்)**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சின்னப்பம்பட்டி கிளையில் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் கிளை மேலாளராக கடந்த மே மாதம் 2025 முதல் பணிபுரிந்து வருகிறேன். பொதுவாக ஒரு காசோலை வங்கியில் சமர்ப்பிக்கப்படும்போது அதில் உள்ள தேதி, வாசகம், தொகை, கையொப்பம் ஆகியவற்றை வங்கியால் சரிபார்க்கப்படும் என்று சொன்னால் சரிதான். எதிரி அளித்ததாக கூறப்படும் காசோலையை புகார்தாரார் எங்கள் வங்கியில் பணம் பெற சமர்ப்பித்திருந்தால் எங்கள் வங்கி அதிகாரிகள் மேற்சொன்னவாறு காசோலையில் உள்ள கையொப்பத்தை சரிபார்த்திருப்பார்கள் ஆனால் மேற்சொன்ன காசோலை வேறொரு வங்கியில் பணம் பெற சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் காரணத்தினால் காசோலையில் உள்ள கையொப்பத்தில் எங்கள் வங்கி பார்க்க இயலாது.

2) எதிரியின் காசோலையில் உள்ள கையொப்பத்தை CCPC (Centerlised Clearing Processing Center) இன் வாயிலாக எதிரி அளித்துள்ளதாக சொல்லப்படும் காசோலையில் உள்ள கையொப்பம் சரிபார்த்தபின்புதான் மெற்சொன்ன காசோலை திருப்பப்பட்டு இருக்கும். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 1 இல் உள்ள கையெழுத்துகள் மற்றும் அ.சா.ஆ.2 ரொக்கம்/காசோலை செலுத்தும் படிவத்தில் உள்ள கையெழுத்துகளும் ஒன்றாக உள்ளதா என்று சொன்னால் கையெழுத்துகளை ஒப்பிட்டு என்னால் அது யாரால் எழுதப்பட்டது என்று சாட்சியம் அளிக்க இயலாது.

...2

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Witness (Sd)- Vanniyaraja

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. D.Sivakumar
Judicial Magistrate No.II,
Sankari.